செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

Date: 16.02.2023

# மொழிகள் பள்ளி மற்றும் மொழிக் கல்வியியல் புலம், மொழித் தொழில்நுட்பப் புலம்

## பயிலரங்கம் – 15

**(14.03.2023 – 23.03.2023)**

# இயற்கை மொழி ஆய்வில் செம்மொழித் தமிழ்
# Natural Language Processing In Classical Tamil

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களின் சிறப்பினை உலகெங்கும் கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. அந்நோக்கத்தை ஈடுசெய்யும் வகையில் மொழிகள் பள்ளி மற்றும் மொழிக் கல்வியியல் புலமும் மொழித் தொழில்நுட்பப் புலமும் செயல்பட்டு வருகின்றன. மொழித் தொழில்நுட்பப் புலம் இயற்கை மொழி ஆய்விற்குத் (Natural Language Processing) துணைசெய்யும் ஆய்வுப்பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றது.

மொழி எனும் கருவி காலந்தோறும் வெவ்வேறு தடங்களில் பயணித்து, இன்று வெவ்வேறு ஊடகங்களில் வேரோடி ஒன்றிணைந்த ஆய்வுக் களங்களை உருவாக்கி வருகின்றது. இந்த நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சிக் காரணமாகப் பல புதிய தொழில்நுட்பங்கள் வளரத் தொடங்கி உள்ளன. இன்று கணினியும் கைப்பேசியும் மக்களுடைய பொதுவெளிப் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. தொழில்நுட்பக் கருவிகள் ஒவ்வொன்றும் பயனாளர் தாய்மொழியில் பயன்படுத்தும் மொழித் தொழில்நுட்பம் சார்ந்ததாய் வடிவமைக்கப்பெற்று வருகின்றன. தொழில்நுட்பம் மட்டுமல்லாது அதை சார்ந்த ஆய்வுகளும் கல்வியுலகில் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. இவ்வாய்வுகளுள் ஒன்று இயற்கை மொழி ஆய்வு.

மனிதர்கள் பேசும் மொழி இயற்கை மொழி. இவ்இயற்கை மொழியினைக் கணினியின் துணைகொண்டு மேற்கொள்ளும் ஆய்வுகள் இயற்கை மொழி ஆய்வு எனலாம். இது கணினி மொழியியல், இணையவழிக் கல்வி, தரவக உருவாக்கம், சொல் வளங்கள், இணையச் சொற்களஞ்சியம், இணையத் தரவுச் சுரங்கம், மொழி ஆய்வுக் கருவிகள் உருவாக்கம், உரைகளை ஆய்தல், உரைகளைப் பேச்சாக்குதல், பேச்சுக்களை உரையாக்குதல், மொழி அலகுகளைப் பகுப்பாய்வுச் செய்தல், மின்னகராதி உருவாக்குதல், சொல் திருத்தி, இலக்கணத் திருத்தி,

உருபனியல் பகுப்பான், உருபனியல் உருவாக்கி, இயந்திர மொழிபெயர்ப்பு மற்றும் தேடுபொறி போன்ற ஆய்வுகளை உள்ளடக்கியது. இம்மொழி ஆய்வினை மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் கொண்டு சேர்ப்பது கல்வியுலகின் கடமை.

இயற்கை மொழி ஆய்விற்குத் தொழில்நுட்பம் பெரும் பங்களிப்பினைச் செய்து வருகின்றது. அந்த வகையில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செவ்வியல் இலக்கண, இலக்கியங்களில் இயற்கை மொழி ஆய்வினை மேற்கொண்டு தொழில்நுட்பத்தின் வழி அடுத்துவரும் தலைமுறையினருக்குத் தமிழ்ச் செவ்வியல் நூல்களைக் கொண்டுசேர்க்க ஆய்வுகளை நிகழ்த்தி வருகின்றது.

அத்தடத்தில், தொழில்நுட்பக் கூறுகளைப் பயன்படுத்திச் செவ்வியல் இலக்கண, இலக்கியங்களை இயற்கை மொழி ஆய்விற்கு உட்படுத்தி, மென்பொருள் உருவாக்கம் மற்றும் புதிய மொழியாய்வுக் களங்கள் குறித்து மாணவர்களும் ஆய்வாளர்களும் அறியவும் பயன்பெறவும் நிறுவனத்தின் மொழித் தொழில்நுட்பப் புலம் 14.03.2023 முதல் 23.03.2023 வரை **இயற்கை மொழி ஆய்வில் செம்மொழித் தமிழ்** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கம் நடத்த திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் சங்க இலக்கியம் மற்றும் கணினித் துறையில் பயிற்சியுடைய பேராசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்துகொண்டு இயற்கை மொழி ஆய்வில் செம்மொழித் தமிழில் இடம்பெற்றுள்ள கூறுகள், எதிர்காலத் தேவை, பயன்பாடுகள் எனப் பல்வேறு பரிமாணங்களில் பயிற்றுரை வழங்க இருக்கிறார்கள். இப்பயிலரங்கில் கலந்து கொண்டு பயன்பெற மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

## பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 30.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 14.03.2023 முதல் 23.03.2023 முடிய பத்து நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை.
4. பங்கேற்பாளர்கள்: முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்கள் (இலக்கியம், மொழியியல், கணினி அறிவியல் மற்றும் பொறியியல்)
   - இலக்கியம், மொழியியல் துறையில் கணினி சார்ந்த ஆய்வில் ஈடுபடும் மாணவர்கள்.
   - கணினி அறிவியல், பொறியியல் துறையில் தமிழ் சார்ந்த இயற்கை மொழி ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்கள்.
   - பங்கேற்பாளர்கள் மடிக்கணினியோடு வருதல் நலம்.
5. **பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.**

6. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
7. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
8. பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இத்துடன் இணைக்கப் பெற்றுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshopslle@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ கைப்பேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.
9. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
10. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்பெற வேண்டும்.
11. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டாது.
13. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய **இறுதி நாள் 28.02.2023**. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
14. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **01.03.2023** அன்று மின்னஞ்சல்/ புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
15. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை – 600 100

## மொழிகள் பள்ளி மற்றும் மொழிக் கல்வியியல் புலம்,
## மொழித் தொழில்நுட்பப் புலம்

# இயற்கை மொழி ஆய்வில் செம்மொழித் தமிழ்
Natural Language Processing in Classical Tamil

பயிலரங்கம் – 15

## விண்ணப்பப் படிவம்

2022-2023

பெயர்
தமிழ் ____________________
ஆங்கிலம் ____________________

பிறந்த நாள்/வயது ____________________

பாலினம் ☐ ஆண் ☐ பெண் ☐ திருநங்கை

வகுப்பு ☐ பொது ☐ இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ☐ பட்டியல் வகுப்பினர்

கல்வித் தகுதி (*முதுகலை / ஆய்வாளர்கள் [M.Phil., Ph.D.,]* ) ____________________

பாடப்பிரிவு & ஆண்டு (*முதுகலை*) ____________________ ☐ முதல் ☐ இரண்டு

ஆய்வுத் தலைப்பு (*ஆய்வாளர்கள்*) ____________________

முகவரி

*பல்கலைக்கழகம் / கல்லூரி/ நிறுவனம்*

*இல்லம்*

கைப்பேசி (*புலன எண்*) ____________________ மின்னஞ்சல் ____________________

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இக்கல்வியாண்டில் (2022 - 2023) நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக.

நாள்:

இடம்: (கையொப்பம்)

துறைத் தலைவர் / நெறியாளர் கையொப்பம்
(உரிய முத்திரையுடன்)